பிற்பகல் 12–20

5. கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

(ஆ) கூட்டுறவுத் துறையின்கீழ் பணிபுரியும் மருந்தாளுநர்களை பணி வரன்முறை செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், திரு. அ. நல்லதம்பி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

***முனைவர் கோவி. செழியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவுத் துறையின்கீழ் பணிபுரியும் மருந்தாளுநர்களை பணி வரன்முறை செய்யவேண்டிய அவசியம் குறித்தும், அந்த ஊழியர்களுடைய அவல நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

தமிழ்நாட்டில் 112 அம்மா மருந்தகங்கள் மற்றும் 172 கூட்டுறவு மருந்தகங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. மேற்படி மருந்தகங்களில் தகுதிவாய்ந்த மருந்தாளுநர்கள் நியமனம் செய்யப்பட்டு, மருந்தகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளால் 31 அம்மா மருந்தகங்களும், 77 கூட்டுறவு மருந்தகங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளால் நடத்தப்பட்டுவரும் அம்மா மருந்தகங்களில் தற்போது 33 மருந்தாளுநர்களும், கூட்டுறவு மருந்தகங்களில் 78

மருந்தாளுநர்களும் பணிபுரிந்து வருகின்றனர். நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள்மூலம் நடத்தப்படும் மருந்தகங்களில் 111 மருந்தாளுநர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இதில், பெரும்பான்மையான மருந்தாளுநர்கள் வெளிக்கொணர்வு முகமைமூலம் பணியமர்த்தம் செய்யப்பட்டு, பணிபுரிந்து வருகின்றனர். மேற்படி மருந்தாளுநர்களுக்கு தகுதிக்கேற்ப ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து மருந்தகங்களிலும் தற்போது மருந்தாளுநர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மருந்தகங்களில் மருந்துகள் விற்பனை எவ்வித இடையூறுமின்றி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. எனவே, மருந்தாளுநர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாத காரணத்தால் மருந்தகங்களில் பதட்டமான சூழ்நிலை எழவில்லை.

மேலும், மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளின் நிதிநிலைமை மற்றும் பண்டகசாலைகளால் நடத்தப்படும் மருந்தகங்களின் விற்பனை மற்றும் இலாப/நட்டம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, மேற்படி மருந்தகங்களில் மருந்தாளுநர்கள் பதவிக்கான பணியிடங்களைப் பண்டகசாலைகளின் பணிநிலைத் திறனில் (cadre strength) ஏற்படுத்திய பின்னர் தகுதியின் அடிப்படையில் கூட்டுறவுச் சங்கங்களில் சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு உரிய நடவடிக்கைகள் இதன் தொடர்பில் மேற்கொள்ளப்படும்.

நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளில் பணிபுரியும் மருந்தாளுநர்களின் விவரம்

வ. எண்	மண்டலத்தின் பெயர்	பண்டகசாலையின் பெயர்	அம்மா மருந்தகம்		கூட்டுறவு மருந்தகம்	
			கடைகளின் எண்ணிக்கை	மருந்தாளுநர் எண்ணிக்கை	கடைகளின் எண்ணிக்கை	மருந்தாளுநர் எண்ணிக்கை
1.	சென்னை	பூங்கா நகர்	1	2	2	3
		வடசென்னை	1	1	1	1
		டி.யூ.சி.எஸ்.	2	2	5	5
2.	கோயம்புத்தூர்	சிந்தாமணி	–	–	2	2
		பொள்ளாச்சி	1	1	1	1

2019 ஜூலை 18] [திரு. செல்லூர் கா. ராஜு]

3.	கடலூர்	கடலூர் சரவணபவா	1	1	2	2
4.	தருமபுரி	தருமபுரி	1	1	3	3
5.	திண்டுக்கல்	திண்டுக்கல்	—	—	1	1
6.	ஈரோடு	ஈரோடு	2	2	10	10
7.	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம்	1	1	1	1
8.	கரூர்	கரூர்	2	3	—	—
9.	மதுரை	மதுரை பாண்டியன்	—	—	6	6
10.	நாகப்பட்டினம்	மயிலாடுதுறை	1	1	4	4
11.	நாமக்கல்	நாமக்கல்	0	0	2	2
12.	நீலகிரி	நீலகிரி கூட்டுறவு நிறுவனம்	—	—	2	2
		நீலகிரி	2	2	—	—
13.	பெரம்பலூர்	பெரம்பலூர்	2	2	1	1
14.	இராமநாதபுரம்	இராமநாதபுரம்	1	1	2	2
15.	சேலம்	சேலம்	2	2	5	5
16.	சிவகங்கை	சிவகங்கை	1	1	3	3
17.	தஞ்சாவூர்	தஞ்சாவூர்	—	—	1	1
		சந்திரசேகரபுரம்	2	2	1	1
18.	திருநெல்வேலி	திருநெல்வேலி	2	2	2	2
19.	திருவள்ளூர்	திருவள்ளூர்	1	1	2	2
20.	திருவாரூர்	திருவாரூர்	2	2	3	3
21.	தூத்துக்குடி	தூத்துக்குடி	1	1	1	1
22.	திருப்பூர்	திருப்பூர்	—	—	1	1
23.	திருவண்ணாமலை	திருவண்ணாமலை	1	1	1	1
24.	திருச்சிராப்பள்ளி	அமராவதி	1	1	1	1
		சிந்தாமணி	—	—	4	4
25.	வேலூர்	வேலூர்	—	—	4	4
26.	விழுப்புரம்	விழுப்புரம்	—	—	1	1
27.	விருதுநகர்	விருதுநகர்	—	—	1	1
		இராசபாளையம்	—	—	1	1
மொத்தம்			31	33	77	78

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவன ஈர்ப்பு அறிவிப்பு எண் 219, 3 பத்திகள், 21 வரிகளில் விவர அறிக்கையை வழங்கியிருக்கிறார்கள். முழுமையாகப் படித்துப் பார்த்தேன்.

[முனைவர் கோவி. செழியன்] [2019 ஜூலை 18

முதல் பத்தியில் துறையின் நடவடிக்கையும், இறுதி பத்தியில் செய்யவேண்டிய பணிகள் பற்றியும், நடு பத்தியில் நான் கேட்ட கேள்விக்கான ஒரு சில விளக்கங்களையும் வழங்கியிருக்கிறார்கள். ஆனாலும்கூட, கூட்டுறவு பண்டகசாலைமூலம் நடத்தப்படுகிற மருந்தகங்கள் அம்மா மருந்தகம் என்ற பெயரிலும், கூட்டுறவுச் சங்க மருந்தகம் என்ற பெயரிலும் நடைபெற்று வருகின்றன. D.Pharm, B.Pharm *படித்தவர்கள்தான் அந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் கடைகளை எடுத்து நடத்த இயலும். அவர்கள் விற்பனை செய்கிற பொருட்களுக்கு 15 சதவீதம். நீங்கள், விற்பனையில் 15 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை வழங்குகிறீர்கள். வாங்குபவர்களுக்கு 20 சதவீதம் வழங்கிவிட்டு, விற்கக்கூடியவர்களுக்கு போதிய சம்பளம் இல்லையென்றால் எந்த மனநிலையில் இருப்பார்கள் என்பதை இந்த அரசின் கவனத்தை நான் ஈர்க்க விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, அந்தப் பணியாளர்கள் கடைகள் விற்கிற . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் விவர அறிக்கையிலிருந்து ஒரு கேள்வி கேளுங்கள். அறிக்கையிலிருந்து ஒரு கேள்வி கேளுங்கள். அறிக்கையைப் படித்துப் பார்த்து விட்டீர்கள் இல்லையா? அதிலே இருந்து கேள்வியைக் கேளுங்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் புரிந்துகொண்டேன். மருந்து மாத்திரை விற்பனை செய்கிற மருந்தாளுநர்களுடைய மனநிலை இன்றைக்கு அந்த மருந்துகளால் ஏற்படக்கூடிய இழப்பு நஷ்டம் காலாவதி ஆகிவிட்ட பொருளுக்கு உரிய பணம் செலுத்தவில்லையென்று சொன்னால், அவர்கள் பணத்திலே பிடித்துக்கொள்கிற நிலை. நான் சொல்வது மிக முக்கியமான பிரச்சினை. அதனால் சற்று. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இப்போது நேரம் என்ன ஆகிறது என்று பாருங்கள். இன்றைக்கு நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டிய பட்டியல் இருக்கிறது. நீங்கள் இதற்கு ஒத்துழைக்கவில்லையென்றால் நான் என்ன செய்வது? (குறுக்கீடு) தொடர்ச்சியாக சொல்ல முடியாது. கேள்விதான் கேட்க வேண்டும்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருந்தாளுநர்களுடைய மனநிலையை உணர்ந்த கலைஞர் அரசு, 2010 ஆம் ஆண்டில் மயிலாடுதுறையில் உள்ள பி. மகாலட்சுமி என்பவருக்கு பணி நியமனம் வழங்கியிருக்கிறது. எனவே, அதைப் பின்பற்றி மருந்தாளுநர்களைப் பணி வரன்முறை*

2019 ஜூலை 18] [முனைவர் கோவி. செழியன்]

செய்து, ஊதியத்தை உயர்த்தித் தந்து, ஊக்கத் தொகையை அதிகரித்து, மூடுகிற நிலையில் இருக்கிற அம்மா மருந்தகங்களை மூடாமல் நிலை நிறுத்தவேண்டிய பொறுப்பு அரசின் கவனத்தில் உண்டா என்பதைக் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் சொல்லவேண்டியதை விட்டுவிட்டு ஏதேதோ சொல்கிறீர்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உண்மைக்குப் புறம்பாக பல தகவல்களைச் சொல்கிறார்கள். இந்த மருந்தகங்கள் எல்லாம் கூட்டுறவுத் துறையால் நடத்தப்படுகின்றன. உங்களுடைய காலத்திலும் தொடங்கப்பட்டன. மாண்புமிகு அம்மா அவர்கள் அதிலே சிறப்புக் கவனம் செலுத்தி, இதை ஒரு சேவை மனப்பான்மையோடு, 100 அம்மா மருந்தகங்களைத் தொடங்கினார்கள். அந்த 100 மருந்தகங்களைத் தொடங்குகின்றபோது மிகப் பெரிய வரவேற்பு கிடைத்தது. இதன் அடிப்படையிலே, 112 அம்மா மருந்தகங்களாக இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதேமாதிரி, கூட்டுறவுத் துறையில் 172 அம்மா மருந்தகங்கள் செயல்படுகின்றன. ஆக, மொத்தம் 284 மருந்தகங்கள் செயல்படுகின்றன. இந்தக் கடைகளில் 20 சதவீதம் வரை தள்ளுபடி செய்யப்படுகிறது.*

பிற்பகல் 12—25

இது முழுக்க முழுக்க எதற்காக என்றால், பொதுச் சந்தையில் மருந்துகள் விலை அபரிமிதமாக ஏறிக்கொண்டிருந்தது. அங்கு வருகிற நோயாளிகளுக்கும் மற்றவர்களுக்கும் அவ்வாறு விலை கூடுதலாக விற்பதைக் கட்டுப்படுத்துகின்ற வகையில், விலை நிலைப்படுத்தும் நிதியம் மூலமாக, அம்மா அவர்கள் ஒரு கடைக்கு 10 இலட்சம் ரூபாய் என்ற அளவில் ஏறத்தாழ 100 கடைகளைப் புனரமைத்து, அங்கே குளிரூட்டும் வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளும் செய்யப்பட்டு, அந்தக் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்தக் கடைகளின் மூலமாக வெளிச்சந்தை விலையைக் கட்டுப்படுத்துவதற்காகக் கொண்டுவந்தார்கள். 2014 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட அம்மா மருந்தகங்கள் இன்றைக்கு தமிழகத்திலே மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் தனியார் மருந்தகங்களும் இன்றைக்கு 10 சதவிகிதம்,

[திரு. செல்லூர் கா. ராஜு] [2019 ஜூலை 18

20 சதவிகிதம் அளவிற்கு தள்ளுபடி கொடுக்கின்றன. மேலும், இதை சேவை மனப்பான்மையோடு செய்ய வேண்டுமென்பதால் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்று நடத்துகின்றன.

அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்கு காலாவதியான மருந்துகள் விற்கப்படுவதாகச் சொன்னார். அது தவறான தகவல். அவைக்கு தவறான தகவலைக் கொடுக்கக் கூடாது. அங்கே software போட்டிருக்கிறோம். Expiry date வருவதற்கு ஆறு மாதங்கள் இருக்கும்போதே, அந்த மருந்து bill ஆகாது. அவர்களால் Bill போடவே முடியாது. அந்த மருந்தை விற்பனை செய்யவும் முடியாது. ஆக, எந்தெந்த மருந்துகள் அவ்வாறு காலாவதியானது என்பதை உடனடியாக அங்கே இருக்கிற மருந்தாளுநரும், உடன் இருப்பவரும் எடுத்துக் கொடுத்துவிடுவார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது தவறான தகவல்.

அதேபோல், எந்தக் காலத்திலும் மருந்தாளுநர்கள் காலமுறை ஊதியத்தில் நியமனம் செய்யப்படவில்லை. தொகுப்பூதியத்தில்தான் அவர்கள் ஆட்சிக்காலத்திலும் நியமனம் செய்யப்பட்டார்கள். மருந்தாளுநர்கள் பொதுவாக குறைந்தபட்சம் ரூ.4,500/–லிருந்து ரூ.26,000/– வரை சம்பளமாகப் பெறுகிறார்கள். மேலும், அவர்களுக்கு சம்பளம் என்பதோடு, வியாபாரத்திற்குத் தகுந்தாற்போல் incentive–ம் கொடுக்கப்படுகிறது. மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளால் 31 அம்மா மருந்தகங்களும், 77 கூட்டுறவு மருந்தகங்களும் என 108 மருந்தகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்தப் பணியாளர்கள் கூடுதல் நேர வேலை எதுவும் பார்க்கவில்லை. Shift முறையில்தான் பணிபுரிகிறார்கள். 77 கூட்டுறவு மருந்தகங்களுக்கு 78 மருந்தாளுநர்கள் இருக்கிறார்கள். 31 அம்மா மருந்தகங்களுக்கு 33 மருந்தாளுநர்கள் இருக்கிறார்கள். கூடுதல் வேலை வரும்போது இன்னொரு மருந்தாளுநரும் பணிபுரிய அனுமதிக்கப்படுகிறார். ஆகவே, மருந்தாளுநர்கள் எந்தவகையிலும் பாதிக்கப்படாத அளவிற்குத்தான் இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய சம்பளத்தைப் பொறுத்தளவில், கூட்டுறவுச் சங்க மருந்தகங்களின் வியாபாரத்தின் தன்மையைப் பொறுத்திருக்கிறது. கூட்டுறவு மருந்தகங்கள் எந்தவொரு இடத்திலும் மூடப்படவில்லை என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். 172 கூட்டுறவு மருந்தகங்களும், 112 அம்மா மருந்தகங்களும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. அவற்றில், சுமார் 10

கூட்டுறவு மருந்தகங்களும், 5 அம்மா மருந்தகங்களும் நஷ்டத்தில் இயங்குகின்றன. இவற்றிற்கெல்லாம் மாற்று இடம் பார்த்து, அங்கே அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள், சுருக்கமாகக் கேள்வி கேளுங்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கூட்டுறவு மருந்தகங்கள் மூடப்படவில்லை என்று சொன்னார்கள். போதிய ஊதியம் கிடைக்காத காரணத்தால், மருந்தாளுநர்களுக்கு மன உளைச்சல் ஏற்பட்டுள்ளது. இதனால், திருவொற்றியூர், காலடிப்பேட்டை, கீழ்ப்பாக்கம் போன்ற பகுதிகளில் உள்ள மருந்தகங்கள் மூடப்பட இருப்பதாகவும், அவர்களுக்கு ஊக்கத் தொகையை இன்னும் அதிகரித்து வழங்கினால் கடைகளைத் தொடர்ந்து நடத்தவும், ஊழியர்களுக்கு பாதுகாப்பு வழங்கவும் இயலும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதோடு மட்டுமல்ல. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அவர் முடித்ததாகக் கருதப்படுகிறது. உட்காருங்கள். (குறுக்கீடு) பரவாயில்லை, உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், திரும்பத் திரும்ப தவறான தகவலைச் சொல்லக் கூடாது. 30–6–2019 வரை 172 கூட்டுறவு மருந்தகங்களில் 529.87 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை நடைபெற்றுள்ளது. அதேபோல், 112 அம்மா மருந்தகங்களில் 306.09 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை நடைபெற்றுள்ளது. ஒட்டுமொத்தமாக இந்த மருந்தகங்களின்மூலம் 835.96 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் எந்தவொரு மருந்தகமும் மூடப்படுகின்ற நிலையில் இல்லை. அப்படி இருக்கும்பட்சத்தில், அதாவது, வியாபாரம் இல்லாத அல்லது*

[திரு. செல்லூரர் கா. ராஜூ] [2019 ஜூலை 18

வியாபாரம் குறைவாக இருக்கும்பட்சத்தில், அருகிலேயே மாற்று இடத்தில் மருந்தகம் அமைப்பதற்கு துறைரீதியான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், மருந்தாளுநர்கள் யாருக்கும் மன உளைச்சல் இல்லை, மகிழ்ச்சியாகவே இருக்கிறார்கள், யாருக்கும் எந்தவித பாதிப்பும் இல்லை. அதுவும் கூட்டுறவுத் துறையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆட்சியில் 21 சதவிகிதம் சம்பள உயர்வு கொடுத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இது எந்த வரலாற்றிலும் கிடையாது. அவர்களது ஆட்சிக் காலத்திலும் கிடையாது. அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் சம்பளத்தை இரண்டு முறை உயர்த்தி, 21 சதவிகிதம் வரை உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். இதில் எந்தவிதமான தவறுகளோ, யாருக்கும் எந்தவிதமான மன உளைச்சலுமோ இல்லை, நன்றாகவே இருக்கிறார்கள். அம்மா மருந்தகங்களைக் கூடுதலாகத் திறப்பதற்கும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—30

(இ) காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்தி கூடுதல் மருத்துவர்களை நியமித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவார். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் அரசு மருத்துவமனையைத் தரமுயர்த்தி, கூடுதல் மருத்துவர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.